குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.77/2021

ம.சா.1

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் தேதி வியாழக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணி | தொழில் | |
| தந்தை பெயர் | சித்துராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.35 மணி,

Complainant Balasubramani present. Advocate Mr.P.Soundharajan present for Complainant. Accused Murugan Present. Advocate Mr.B.Sivaram present for Accused.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) கிரயம் செய்யும் நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் சரி. கிரயப்பத்தில் எழுதபட வேண்டிய சங்கதிகள் பற்றிய விபரங்கள் மற்றும் யாரை சாட்சிகளாக போட வேண்டிய பற்றி விபரம் தெரியும் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள தானசெட்டில்மண்ட் பத்திரம் தொடர்பான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. ம.சா.ஆ.10 ஆவணம் ேஹமலதா என்பவருக்கு 06.11.2020 ம் தேதி நான் எழுதி கொடுத்த கிரய ஆவணத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரய பத்திரத்தில் உள்ள சொத்து சேலம் ஜங்கனில் உள்ளது.

2) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள சொத்து ரூ.9,00,000/– க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.10 ஆவணத்தின் படி ரூ.9,00,000/– வரைவோலை மூலமாக எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ.6 ஆவணத்தில் இந்த ரூ.9,00,000/– ம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி பணத்தை 06.11.2020 ம் தேதி செலுத்தப்பட்டு அன்றைய தினமே எடுத்துவிட்டேன் என்றால் சரி. கிரயபத்திரம் எழுதும் போது அந்த சொத்து தொடர்பாக ஏற்கனவே கிரய ஒப்பந்தம் ஏற்படப்பட்டு இருந்தால் அதை பற்றி குறிப்பிடவேண்டும் என்றால் மேற்படி ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு இருந்தால் குறிப்பிட வேண்டும், பதிவு செய்யப்படவில்லை என்றால் குறிப்பிட தேவையில்லை.

3) கிரய ஒப்பந்தத்தை பதிவு செய்யப்பட்டு இருந்தாலும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் கிரய பத்திரத்தில் சட்டப்படி குறிப்பிட வேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த சொத்து தொடர்பாக ஏற்கனவே வேறு நபரிடம் கிரய

ஒப்பந்தம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு அல்லது பதிவு செய்யாமல் இருந்தாலும் அதனை ரத்து செய்துவிட்டு தான் புதிய நபரிடம் கிரயபத்திரம் செய்யவேண்டும் என்றால் பதிவு செய்திருந்தால் தான் ரத்து செய்ய வேண்டும். ஏறகனவே வேறு நபரிடம் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டு இருந்தால் கிரய பத்திரத்தில் அவரை சாட்சியகவோ அல்லது தரப்பினராகவோ சேர்க்க வேண்டும் என்றால் தேவையில்லை.

4) ம.சா.ஆ.10 கிரய ஆவணத்தில் பழனிகவுண்டன் மகன் நாகராஜன் என்பவரை சாட்சியாக அல்லது தரப்பினராகவோ காட்டபடவில்லை என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தில் ஆவணத்தை வாங்கிய நபரின் பெயர் நாகராயன், தீவட்டிப்பட்டி என்று உள்ளது என்றால் சரி. பத்திரம் யார் பெயரில் ஒப்பந்தம் செய்யப்படுகிறதோ அவருடைய பெயரில் வாங்கபடும் என்றால் சரி. பத்திரத்தை வாங்கும் போது அது வாங்கும் நபரின் முழு விலாசம் எழுதி தான் விற்பனை செய்வார்கள் என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தில் நாகராஜனின் முகவரி காடையாம்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி பத்திரத்தின் அசல் ஆவணம் நாகராஜன் என்பவரிடத்தில் தான் இருந்தது. என்ன ஆனது என்று தெரியவில்லை.

5) ஒரு ஆவணத்தை எழுதும் போது அதை எழுதி தயாரித்தவரின் பெயரை இறுதியில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தை எழுதி தயாரித்தது யார் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.8 ஆவணத்தில் எழுதி தயாரித்தவர் என்ற விபரங்களை இல்லை என்றால் சரி. சட்ட அறிவிப்பு, புகார் மனு, பிரமாண பத்திரிக்கை ஆகியவற்றில் ம.சா.ஆ.8 ஆவணத்தை பற்றிய விபரங்கள் ஏதும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள சொத்தை ரூ.20,00,000/– விலைப் பேசி ரூ.10,00,000/– ம் முன்பணமாக பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரி. ம.சா.ஆ.10 ஆவணத்தில் ேஹமலதா என்பவருக்கு நான் கிரயம் செய்த சொத்து தான் ம.சா.ஆ.8 ஆவணத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட சொத்து என்றால் சரி.

6) ம.சா.ஆ. 10 ஆவணத்தில் உள்ள சொத்தின் விற்பனை தொகை ரூ.9,00,000/– என்றால் சரி. ஆனால் ம.சா.ஆ–8 ஆவணத்தில் அதே சொத்தின் மதிப்பு ரூ.20,00,000/– ம் என்று காட்டி இந்த ஆவணத்தை வழக்கிற்காக பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய முந்தைய குறுக்கு விசாரணையில் ரூ.10,00,000/–ம் கடன் கொடுப்பதற்கான பொருளாதார வசதி எனக்கு இல்லை என்று கேள்வி கேட்கப்பட்டது என்றால் சரி. அதன் பின்னிட்டு ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.11 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி.

7) ம.சா.ஆ.8 ஆவணத்தின் அசல் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் நாகராஜன் இடத்தில் ஆவணம் இருக்கிறது அது என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. ம.சா.ஆ–8 ஆவணத்திற்கு பிறகு தான் ம.சா.ஆ–10 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தை ரத்து செய்ததற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரி. ம.சா.ஆ.8 ஆவணத்தை ரத்து செய்து ஆவணம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை.

அவ்வாறு ஒரு சொத்தை பொறுத்து ஏற்கனவே பதிவு செய்தோ அல்லது செய்யாமலோ கிரய ஒப்பந்தம் நிலுவையில் இருந்து அது ரத்து செய்யப்படாமல் வேறு நபரிடம் கிரய பத்திரம் ஏற்படுத்தினால் அது செல்லாது என்றால் சரியல்ல.

8) ம.சா.ஆ.10 ஆவணத்தை குறித்து நாகராஜனுக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் மேற்படி சொத்தை விலை பேசி முன்நின்று விற்பனை செய்து கொடுத்தது நாகராஜன் தான். அப்படி இருக்கும் சூழ்நிலையில் நாகராஜனிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவசியம் இல்லை என்பதால் வாங்கவில்லை. நான் சொல்வது போல் இல்லை என்றாலும் ம.சா.ஆ.8 ஆவணத்தை முந்தை குறுக்கு விசாரணைக்கு பிறகு மோசடியாக தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணம் புகைப்பட நகல் சாட்சிய சட்டத்தின் படி ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

9) ம.சா.ஆ.11 ஆவணத்தின் படி அரசு மதுபான கடை எனது கட்டிடத்தில் உள்ளது என்றால் சரி. சட்ட அறிவிப்பு, புகார் மனு, பிரமாண பத்திரிக்கை ஆகியவற்றில் எனது முகவரி சேலம் மாவட்டம், காடையம்பட்டி வட்டம் மற்றும் அஞ்சல், டேனிஸ்பேட் மெயின்ரோடு சித்துராஜ் மகன் பாலசுப்பிரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ–10 ஆவணத்தில் உள்ள எனது முகவரி சேலம் மாவட்டம், காடையம்பட்டி வட்டம், சேலம் 636351 கிராம அலுவலகம் எதிரில் டேனிஸ்பேட் மெயின்ரோடு கதவு எண் 9/73–11 ல் வசித்து வரும் Late K.S.சித்துராஜ் மகன் பாலசுப்பிரமணி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரி. ம.சா.ஆ–11 ஆவணத்தில் 14.07.2017 ம் தேதி கடிதத்தில் 15.07.2017 ம் தேதி முதல் என்னுடைய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ.11 ஆவணத்தில் அட்வான்ஸ் மற்றும் வாடகை தொகை குறிப்பிடவில்லை என்றால் சரி. 15.11.2017, 14.11.2018, 14.11.2019, 27.11.2020 ஆகிய தேதிகளில் உள்ள கடிதங்கள் அனைத்தும் உரிமம் நீட்டிப்பிற்கான ஆவணம் என்றால் சரி. மேற்படி கடிதங்களில் உள்ள முகவரி கதவு எண் 11/86, நாச்சினம்பட்டி காட்டுவளவு, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்சொன்ன உரிமம் நீட்டிப்பிற்கான கடிதங்களில் சித்துராஜ் மகன் பாலசுப்பிரமணி என்பவரின் இடத்தில் அரசு மதுபான கடை இயங்கிதற்கான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரி.

10) 15.07.2017 ம் தேதிக்கு பிறகு என்னுடைய கட்டிடத்தில் அரசு மதுபான கடை இயங்கி வருவதற்கான ஆவணம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரி. மேற்படி கட்டிடத்திற்கான முன்பணம் மற்றும் வாடகைக்கான ஆவணம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரி. மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்காக போலியாக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ரூ.10,00,000/– ம் கொடுப்பதற்கான பொருளாதார வசதி இல்லை என்றாலும் எனது வங்கி பரிவர்த்தனை ஆவணங்களில் ரூ.10,00,000/– ம் இருந்ததற்கான ஆவணம் ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல. அதற்காக ம.சா.ஆ–8 ஆவணத்தை போலியாக தயாரித்து தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 04.21 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.